# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.434/2023 | Date | : 16.12.2024 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : பிரகதீஸ்வரன் | Calling | : |
| Father / Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.12.2024.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் அழகாபுரம், சிவாய நகரில் வசித்து சேலத்தில் மருந்து விற்பனை நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 11–04–2021ம் தேதி, காலை சுமார் 08.30 மணியளவில் சேலத்தில் இருந்து கோவை செல்வதற்காக என்னுடைய Yamaha MT–15 இருசக்கர வாகனத்தில் வண்டியை எதிரி ரிஷிகுமார் ஓட்டி நான் பின்னால் அமர்ந்துகொண்டு ஆவின் பாலகம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் கோவை நோக்கி சாலையின் இடதுபுறம் சென்றுகொண்டிருந்தோம்.

2) அப்போது, இடதுபுறம் இருந்து ஒருஇருசக்கர வாகனம் தேசிய நெடுஞ்சாலையை நோக்கி வந்தது. அதை பார்த்ததும் ரிஷிகுமார் இருசக்கர வாகனத்தை வலதுபுறமாக திருப்பினார். எங்கள் இருசக்கர வாகனம் முன்னால் சென்ற Honda Shine இருசக்கர வாகனத்தின்மீது மோதியது. Honda Shine இருசக்கர வாகனத்தில் சென்றவர்களும்,

நாங்களும் தேசிய நெடுஞ்சாலையில் விழுந்துவிட்டோம். Honda Shine இருசக்கர வாகனத்தில் சென்றவருக்கு தோள் மற்றும் உடல் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது.

3) ரிஷிகுமார், இருசக்கர வாகனத்தை சற்று வேகமாக ஓட்டிசென்றார். எங்களுடைய நண்பர்கள் மூலம் சங்ககிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். Honda Shine இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் சங்ககிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார்கள். ரிஷிகுமார் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் சென்றதே இந்த விபத்திற்கு காரணம் ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :–

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

Sd/-Pragadeeshwaran

Sd/-S.R.Babu,
Judicial Magistrate No.I,
Sankari.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.434/2023 | Date | : 16.12.2024 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : திருநாவுகரசு | Calling | : |
| Father / Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.12.2024.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், அங்காளம்மன் கோவில் தெருவில் குடியிருந்து சின்னாகவுண்டனூரில் உள்ள லட்சுமி பேக்கரியில் சம்பவத்தின்போது வேலை செய்து வந்தேன். கடந்த 11-04-2021ம் தேதி, காலை சுமார் 08.30 மணியளவில் சேலத்தில் இருந்து கோவை நோக்கி தேசிய நெடுஞ்சாலையில் 04 அல்லது 05 இருசக்கர வாகனங்கள் வேகமாக வந்துகொண்டிருந்தது. அப்போது, ஒருஇருசக்கர வாகனம் முன்னால் சென்ற மற்றொரு இருசக்கர வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2) பின்னர், நான் பேக்கரியில் இருந்த ஒரு துணியை எடுத்து கொண்டு சென்று விபத்தில் அடிப்பட்டவர்களின் தலையில் கட்டினேன். பின்னர், ஆம்புலன்ஸ் மூலம் அடிப்பட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். விபத்து நடந்து சுமார் 04 வருடங்கள் ஆகிவிட்டதால்

சம்பவத்தில் அடிப்பட்டவர்களை நான் மறந்துவிட்டேன். வாகனங்கள் வேகமாக வந்ததே விபத்திற்கு காரணம் ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :–

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

Sd/-Thirunavukarasu

Sd/-S.R.Babu,
Judicial Magistrate No.I,
Sankari.